# இரட்சிப்பின் படிமுறை ஒழுங்கு

## ORDER OF SALVATION

ஆர். பாலா

RP REFORMED PUBLICATIONS

சீர்திருத்த வெளியீடுகள்
சென்னை, இந்தியா

**இரட்சிப்பின் படிமுறை ஒழுங்கு**

*ஆர். பாலா*

*முதல் பதிப்பு: ஜனவரி 2016*

*கிடைக்குமிடம்:*

**சீர்திருத்த வெளியீடுகள்**
*6/87 காமராஜர் தெரு,*
*திருவள்ளுவர் நகர்,*
*அயனாவரம்,*
*சென்னை 600023.*
*தமிழ்நாடு, இந்தியா.*
*தொலைபேசி: 9445671113*
*ஈமெயில்:* rpchennai23@gmail.com

*கிறிஸ்தவ தமிழ் இலக்கியங்கள் குறித்த மேலதிக தகவல்களுக்கு* www.biblelamp.org *வலைப்பூவைப் பார்க்கவும்.*

# அர்ப்பணம்

**ரொபட் வெட்டி**

*முப்பது வருடங்களாக என்னுடைய ஊழியப்*
*பணிகளுக்கும், இலக்கியப் பணிகளுக்கும்*
*ஊக்கமளித்து உற்சாகப்படுத்தி வரும்*
*ஆவிக்குரிய உற்ற நண்பர்,*
*கிறிஸ்தவ இலக்கிய ஆர்வலர்.*

"வேத போதனைகளான மறுபிறப்பு, நீதிமானாக்குதல், மகவேட்பு, பரிசுத்தமாக்குதல் ஆகியவை கிறிஸ்துவினால் பெற்றெடுக்கப்பட்ட இரட்சிப்பின் இருதயமாக இருக்கின்றன. கர்த்தரின் பிள்ளைகளில் நிகழும் இந்த மீட்பின் கிருபைகளைப்பற்றிய போதனைகளில் தேர்ச்சிபெற்றிருக்க வேண்டியதில் எவரும் கவனக்குறைவாக இருந்துவிடமுடியாது. அப்போஸ்தலர்களின் காலத்தில் இருந்து இன்றுவரை சாத்தான் இரட்சிப்புபற்றிய இந்த முக்கியமான ஆசீர்வாதங்கள்பற்றிய போதனைகளை மழுங்கப்பண்ணவோ அல்லது திரித்துவிளக்கவோ முயற்சிகள் எடுத்து ஆண்களும், பெண்களும் இவைகளை நன்றாகப் புரிந்து ஆரத்தழுவிக்கொள்ளுவதில் இருந்து தடைசெய்வதற்காகப் பெரும் பிரயத்தனம் எடுத்து வருகிறான்."

". . . ஒவ்வொரு பிரசங்கியும் தெளிவுள்ளவனாக, தைரியசாலியாக, வேதத்தில் உறுதியாக நிலைகொண்டிருந்து, கர்த்தர் தந்திருக்கும் இந்த அற்புதமான இரட்சிப்பின் ஆசீர்வாதங்களைப் பிரசங்கிக்கும் பொறுப்பைக் கொண்டிருக்கும் அதேவேளை, கர்த்தருடைய பிள்ளைகள் அனைவரும் இந்தக் கிருபையின் ஆசீர்வாதங்களைப்பற்றிய மிகத்தெளிவான ஞானத்தைக் கொண்டிருப்பது அவர்கள் கர்த்தருடைய பிள்ளைகளாகத் தொடர்ந்திருப்பதற்கு மிகவும் அவசியமானது."

*– அல்பர்ட் என். மார்டின் –*

# பொருளடக்கம்


1. இரட்சிப்பின் படிமுறை ஒழுங்கு ........................................7

2. அழைப்பு ........................................................................ 17

3. மறுபிறப்பு ....................................................................... 31

4. மனமாற்றம் ........................................................................45

5. நீதிமானாக்குதல் ...............................................................60

6. மகவேட்பு ..........................................................................72

7. பரிசுத்தமாக்குதல் ............................................................. 81

8. பரிசுத்தவான்களின் விடாமுயற்சி.................................95

9. கிறிஸ்துவுடன் இணைப்பு ............................................ 105

10. மகிமையடைதல்..............................................................118

இந்நூலின் ஆய்வுக்காகத் துணைபுரிந்த
நூல்களைப்பற்றி . . . ......................................................... 124

# இரட்சிப்பின் படிமுறை ஒழுங்கு

*கர்த்தர் கிறிஸ்து மூலம் இலவசமாக நமக்களிக்கும் இரட்சிப்பு மகத்தானது; அதைவிட மேலானதொன்றுமில்லை. பொதுவாக இரட்சிப்பைப் பற்றி நினைத்துப் பார்க்கும்போது அது கர்த்தர் நமக்களித்திருக்கும் ஆவிக்குரிய வாழ்க்கை என்பதைத்தவிர பெரிதாக எதையும் நாம் எண்ணுவதில்லை. அந்த மகத்தான இரட்சிப்பு எங்கே, எப்படி ஆரம்பித்து நம்மில் எத்தகைய ஆவிக்குரிய விளைவுகளை ஏற்படுத்தியிருக்கிறது, எத்தகைய விளைவுகளை ஏற்படுத்திக்கொண்டிருக்கிறது, எங்கே நம்மை அழைத்துச் செல்லுகிறது என்றெல்லாம் விபரமாக நினைத்துப் பார்ப்பதில்லை. இந்த நூல் அதைத்தான் விளக்கப் போகிறது. இரட்சிப்பு பற்றிய இத்தகைய ஆய்வுகள் எல்லாம் தேவையா? என்று நீங்கள் கேட்கலாம். கர்த்தர் நமக்களித்திருக்கும் மகத்தான இரட்சிப்பு பற்றிய ஆழமான வேத உண்மைகளை விளங்கிக்கொள்ளும்போது அதை நமக்களித்திருக்கும் கர்த்தர் எத்தனைப் பெரியவர் என்று முதலில் நாம் அவரைப் போற்றுவோம். அடுத்ததாக, நமக்குக் கிடைத்திருக்கும் இரட்சிப்பு எத்தனை மகத்தானது என்பதை உணர்ந்து அதைச் சாதாரணமானதாக எடுத்துக்கொள்ள மாட்டோம்; இயேசு கிறிஸ்துவுக்கு மகிமை வரும்படி வாழ முயற்சிப்போம்.*

*இரட்சிப்பைக்குறித்த இத்தகைய ஆழமான விளக்கங்களைத் தருகின்ற நூல்களை நாம் காணமுடியாதிருக்கிறது. இரட்சிப்பு பற்றிய பிரசங்கங்களும், போதனைகளும்கூட வேத உண்மைகளை விளக்குபவையாக இல்லை. பொதுவாகவே கிறிஸ்தவர்கள் இரட்சிப்பில் அடங்கியுள்ள மகத்துவமான சத்தியங்களை*

அறியாமலும், உணராமலும் வாழ்ந்து வருகிறார்கள். அந்தக்குறையை இந்த நூல் தீர்த்துவைக்கும் என்று நம்புகிறேன். இதிலுள்ள பல ஆக்கங்கள் ஏற்கனவே திருமறைத்தீபத்தில் வந்திருக்கின்றன. நூலுக்காக அவற்றில் அவசியமான மாற்றங்களைச் செய்திருக்கிறேன். சிலவற்றைப் புதிதாக எழுதியிருக்கிறேன். கிறிஸ்தவ வாசகர்கள் இம்மாபெரும் வேதசத்தியங்களைத் தெளிவாக விளங்கிக்கொள்ள வேண்டும் என்ற ஆதங்கத்துடன் கவனத்தோடு ஆக்கங்களை வடித்துத் தர முயன்றிருக்கிறேன். இவ்வளவு விரைவாக இதை வெளியிட்டுவிட முடியும் என்று நான் நினைத்திருக்கவில்லை. கர்த்தரின் கிருபையால் இதை வெளியிட முடிந்ததற்காக தேவனுக்கு நன்றி கூறுகிறேன்.

கர்த்தர் உலகத்தோற்றத்துக்கு முன்பாக தனக்கென ஒரு மக்களை இந்த உலகத்தில் தெரிந்துகொண்டார் என்று பவுல் எபேசியருக்கு எழுதிய நிருபத்தில் நினைவூட்டுகிறார். அப்படித் தெரிந்துகொண்ட மக்களை அவர்களுடைய பாவத்தில் இருந்து விடுவித்து இரட்சிப்பை அளிப்பதற்காக கர்த்தர் தன்னுடைய ஒரேபேறான குமாரனை இந்த உலகத்துக்கு அனுப்பிவைத்தார். இதற்கான திட்டம் அநாதி காலத்தில் பரலோகத்தில் திரித்துவ அங்கத்தவர்களால் தீட்டப்பட்டது. அதன்படி பிதாவின் கட்டளையை ஏற்று குமாரன் அந்தத் திட்டத்தை நிறைவேற்ற வந்தார். இந்தத் திட்டத்தை ‘மீட்பின் திட்டம்’ என்று இறையியல் வல்லுனர்கள் அழைப்பார்கள். இந்த மீட்பின் திட்டத்தை நிறைவேற்றுவதற்காக கிறிஸ்து மனித ரூபமெடுத்து நியாயப்பிரமாணத்தைப் பூரணமாகத் தன் வாழ்வில் நிறைவேற்றி இறுதியில் சிலுவையில் மானுட பாவத்துக்காக ஒரேதடவை தன்னைப் பலியாகக் கொடுத்து மரித்து உயிர்த்தெழுந்தார். இதன் மூலம் மீட்பின் திட்டம் கிறிஸ்துவால் நிறைவேற்றப்பட்டது. இந்தத் திட்டம் நிறைவேற்றப்பட்டதாலேயே பாவியாகிய மனிதன் பாவத்திலிருந்து விடுதலை அடையும் வசதி சுவிசேஷத்தின் மூலம் கிடைத்திருக்கிறது. மீட்புத் திட்ட நிறைவேறுதலால் மனிதனுக்கு கிறிஸ்துவால் இரட்சிக்கப்படும் கிருபை கிடைத்திருக்கிறது. மீட்பின் திட்டம் கிறிஸ்து நிறைவேற்றிய பரிகாரப்பலிபற்றிய மாபெரும் சத்தியங்களை உள்ளடக்கியுள்ளது. அந்த சத்தியங்கள் அத்தனை அவசியமானவை. இருந்தபோதும் அந்த சத்தியங்களை விளக்குவதல்ல இந்நூலின் நோக்கம். மீட்பின் நிறைவேற்றுதலால் கிடைக்கப்பெற்ற இரட்சிப்பில் அடங்கியுள்ள பெரும்

சத்தியங்களையே இந்நூல் விளக்குகிறது. இந்த இரட்சிப்பில் காணப்படும் இணைபிரியாத, ஒன்றோடொன்று தொடர்புள்ள, படிமுறையான பல்வேறு கிருபைகளையே இந்நூல் விளக்குகிறது.

இரட்சிப்பாகிய கிருபையை எடுத்துக்கொள்ளும்போது அதில் ஒரு படிமுறையான ஒழுங்கு இருப்பதாக வேதம் நமக்கு விளக்குகிறது. இதை ஆங்கிலத்தில் Order of Salvation என்று கூறுவார்கள். இலத்தீன் மொழியில் இதை Ordo Salutis என்று அழைப்பார்கள். தமிழில் 'இரட்சிப்பின் படிமுறை ஒழுங்கு' என்று இதை அழைக்கலாம். இரட்சிப்பில் படிமுறையாக ஓர் ஒழுங்கிருக்கிறதா? என்று எவராது கேள்வி எழுப்பலாம். ஆம்! அத்தகைய ஓர் ஒழுங்கை நாம் வேதத்தைக் கவனமாக ஆராய்ந்து படிக்கும்போது காணமுடிகிறது. அது என்ன? என்பது அடுத்த கேள்வியாக இருக்கும். நம்முடைய பாவத்திலிருந்து நம்மை விடுவித்து இரட்சிப்பை இலவசமாக நமக்கு வழங்கும் கர்த்தர் அந்தச் செயலை நம்மில் எப்படி ஆரம்பித்து நடத்தி இறுதியில் பரலோகத்தில் கொண்டு சேர்க்கிறார் என்பது பற்றிய தெளிவான படிமுறையான விளக்கத்தையே "இரட்சிப்பின் படிமுறை ஒழுங்கு" என்ற பதங்களின் மூலம் குறிப்பிடுகிறோம். இரட்சிப்பில் பிரிக்கமுடியாதபடி காணப்படும் பல்வேறு படிமுறையான அம்சங்களை இரட்சிப்பின் கிருபைகள் என்று கூறலாம்.

இரட்சிப்பில் காணப்படும், அதோடு தொடர்புடைய இந்தப் படிமுறையான ஒழுங்கைக் குறிப்பிட்டுக் காட்டுகின்ற முக்கிய வசனம் ரோமர் 8:29-30 ஆகிய வசனங்கள்.

> 29 தம்முடைய குமாரன் அநேக சகோதரருக்குள்ளே முதற்பேறானவராயிருக்கும்பொருட்டு, தேவன் எவர்களை முன்னறிந்தாரோ அவர்களைத் தமது குமாரனுடைய சாயலுக்கு ஒப்பாயிருப்பதற்கு முன்குறித்திருக்கிறார்; 30 எவர்களை முன்குறித்தாரோ அவர்களை அழைத்துமிருக்கிறார்; எவர்களை அழைத்தாரோ அவர்களை நீதிமான்களாக்கியுமிருக்கிறார்; எவர்களை நீதிமான்களாக்கினாரோ அவர்களை மகிமைப்படுத்தியுமிருக்கிறார்.

இந்த வசனங்களில் அப்போஸ்தலன் பவுல், தேவன் மனிதகுலத்தில் தாம் முன்குறித்துள்ள மக்களை எந்தவிதமாக கிறிஸ்துவுக்குள் இரட்சித்து இறுதியில் மகிமைப்படுத்துகிறார் என்பதை சுருக்கமாக விளக்குகிறார். அப்படி விளக்கும்போது,

கர்த்தரின் கிருபையின் கிரியையில் ஓர் ஒழுங்கை நாம் பார்க்கமுடிகின்றது. தேவன் தாம் முன்குறித்த மக்களை முதலில் அழைக்கிறார் (Call); அப்படி அழைக்கப்பட்டவர்கள் அவரால் நீதிமான்களாக அறிக்கையிடப்படுகிறார்கள் (Justified); இறுதியில் அவர்களை அவர் மகிமைப்படுத்துகிறார் (Glorified) என்று பவுல் விளக்குவதைக் கவனிக்கிறோம். இரட்சிப்பைப்பற்றிய இந்தப்படிமுறை விளக்கம் சுருக்கமாக இங்கே தரப்பட்டிருக்கிறது. இந்த வசனங்கள் படிமுறையாக மூன்று முக்கிய கிருபைகளை மட்டும் குறிப்பிடுகின்றன. அழைப்பு, நீதிமானாக்குதல், மகிமைப்படுத்துதல் ஆகியனவே அவை. இந்தப் பட்டியலில் வராத வேறுசில முக்கிய கிருபைகளும் இருக்கின்றன. இந்தப் பகுதியில் அவை குறிப்பிடப்படாவிட்டாலும் அவற்றைப்பற்றி புதிய ஏற்பாட்டின் ஏனைய பகுதிகள் தெளிவாக விளக்குகின்றன. அதாவது, கர்த்தர் தாம் முன்குறித்துத் தெரிந்துகொண்டிருக்கிற மக்களுக்கு நித்திய ஜீவனை அளிக்கும் கிரியை, முதலில் அழைப்பாகிய கிருபையில் ஆரம்பித்து மறுபிறப்பு, நீதிமானாக்குதல், மகவேட்பு, பரிசுத்தமாக்குதல், மகிமையடைதல் ஆகிய கிருபைகளை உள்ளடக்கியதாக அமைந்திருக்கிறது என்பதை அறிந்து கொள்கிறோம். சீர்திருத்த இறையியல் வல்லுனரான பேராசிரியர் ஜோன் மரே (John Murray) இதைக்குறித்து பின்வருமாறு விளக்குகிறார், "இரட்சிப்பின் அனுபவம் நம்மில் நிகழ்ந்து விடுகிற சாதாரணமான ஒரு தனி நிகழ்வு மட்டுமே என்று நாம் எண்ணிவிடக்கூடாது. அதில் படிமுறையாக பல நிகழ்வுகள் உள்ளடங்கியிருக்கின்றன. அவை ஒவ்வொன்றும் தனித்துவமானவை. ஒன்றின் அடிப்படையில் இன்னொன்றை நாம் விளக்க முடியாது. ஒவ்வொன்றும் கர்த்தருடைய மீட்பின் கிரியையில் தனித்தனியான அர்த்தத்தையும், திட்டத்தையும் கொண்டு விளங்குகின்றன" என்கிறார்.

மேலே நாம் பார்த்த இரட்சிப்பின் படிமுறை ஒழுங்கை மேலும் விரிவாக ஆராய முடியும். அப்படி அதை விரிவாகப் படிக்கும் போது அது மேலும் சில கிருபைகளையும் தனக்குள் உள்ளடக்கி யிருப்பதைக் காணலாம். அதாவது, அழைப்பு, மறுபிறப்பு, மனமாற்றம், விசுவாசம், மனந்திரும்புதல், நீதிமானாக்குதல், மகவேட்பு, பரிசுத்தமாக்குதல், பரிசுத்தவான்களின் விடாமுயற்சி, கிறிஸ்துவுடன் இணைப்பு, மகிமையடைதல் ஆகியவையே அவை. இந்நூலில் இந்தக் கிருபைகளைத் தனித்தனி அதிகாரங்களில் விளக்கியிருக்கிறேன்.